

# கண்ணகி அம்மன் காவியங்களும் குளுத்திப் பாடல்களும்

வெளியீடு
விருட்சம் சமூக மேம்பாட்டு அமைப்பு
எருவில்

# கண்ணகி அம்மன் காவியங்களும் குளுத்திப் பாடலும்

வெளியீடு
விருட்சம் சமூக மேம்பாட்டு அமைப்பு
எருவில்

# சமர்ப்பணம்

எருவில் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில்
வெங்கலக்குரலில் காவியங்களை பாடி
வந்த அமரத்துவமடைந்த

## "காவிய வீரகர்"

**சிவஸ்ரீ கணபதிப்பிள்ளை சோமசுந்தரம்**

**குருக்கள்**

அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்

# ஆசியுரை

ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் எனக்கு பராயம் தெரிந்த காலம் தொட்டு மறைந்த எனது பாட்டனார் சிவ ஸ்ரீ சோமசுந்தரம் குருக்கள் அவீர்கள் இந்த காவியங்களை சொற்பிழைகள் வராமல் அழுத்தம் திருத்தமாக கணீர் என்ற குரலால் பாடி வந்தார் அவருடைய மறைவுக்குப்பின்னால் என்னால் இயன்றளவு அவர் விட்ட பணியினை நான் செய்து வருகின்றேன். ஏட்டு வடிவில் காணப்பட்ட இக் காவியத்தை நூல் வடிவில் வெளியிடும் பொருட்டு என்னிடம் ஆலோசனை வேண்டி நின்ற விருட்சம் சமூக மேம்பாட்டு அமைப்பினர்க்கு பாடல்களை சரியான முறையில் நெறிப்படுத்தி என்னால் இயன்ற உதவிகளை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். எதிர்கால சந்ததியினருக்கு இந்த நூல் சொற்பிழைகள் வராமல் பாடுவதற்கு பயன்படும் என்பதில் ஐயம் இல்லை இந்த நூல் வெளியிட ஆர்வம் காட்டிய விருட்சம் சமூக மேம்பாட்டு குழுவினர்க்கு கண்ணகிதாயின் அருட்கடாட்சம் கிடைக்கப் பிராத்திப்பதோடு என்றும் எனது நல்லாசிகள் உரித்தாகட்டும்.

"அருள் மழைபொழிந்திடுவாய் கண்ணகிதாயே"

இப்படிக்கு

பக்தபூசனம், சாதகதிலகம்

சிவஸ்ரீ .க.வடிவேல் குருக்கள்

எருவில் ஸ்ரீ புளியடிப்பிள்ளையார் ஆலய பிரதமகுரு

## வாழ்த்துரை

எருவில் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபையின் அனுசரணையுடனும் ஆசியுடனும் எமது இளம் சமுதாய அமைப்பான விருட்சம் சமூக மேம்பாட்டு அமைப்பினர் கண்ணகி அம்மன் காவியங்களை நூல்வடிவாக வெளியீடுவதற்கு முன் வந்துள்ளனர். இவர்கள் இது போன்று பல சேவைகளை செய்ய வேண்டும் என்பது எமது அபிலாசையாகும். எனவே இன் நூலை குறிகிய காலத்தில் வெளியிட்டமைக்காக விருட்சம் குழுவிக்கு எமது நல்வாழ்த்துக்களை கூறி கண்ணகை அம்மன் அருள் மென்மேலும் இவர்களுக்கு கிடைக்க வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

இவ்வண்ணம்

ஆலய பரிபாலனசபை

எருவில் கண்ணகை அம்மன் ஆலயம்

விருட்சம் சமூக மேம்பாட்டு அமைப்பு

எருவில்

# முகவுரை

மட்டக்களப்பு பிரதேசம் பூராகவும் கோயில் கொண்டு அருள் பாலிக்கும் கண்ணகைக்கு காலம் காலமாக காவியங்களும் குளுத்தி பாடல்களும் பாடப்பட்டு வருவது மரபு ஆனால் அது ஏட்டுவடிவிலும் செம்மைப்படுத்தப்படாத நூல் வடிவிலும் காணப்படுகின்றது. புதுமை எனும் வட்டத்திற்கு புகுந்து வாழுகின்ற இன்றைய சமூதாயத்திற்கு பாடிப்பயன் பெறுவதற்கு ஏதுவாக **கண்ணகி அம்மன் காவியங்களும் குளுத்தி பாடல்களையும்** நூல் வடிவில் அச்சியந்திரம் ஏற்றி வெளியிடுவதில் பெருமிதமடைகின்றோம்.

இந்நூல் ஆக்குவதற்கு ஊக்குவித்த ஆர்வலர் அனைவருக்கும் இத்தால் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம்.

**"அன்பான உள்ளங்கள் இருக்கும் வரை நாம் வாழ்வோம்"**

சி. லோகேஸ்வரன்

ஒருங்கமைப்பாளர்

***"விருட்சம்"***

## நெறியாக்கம்

சிவஸ்ரீ க.வடிவேல் குருக்கள்

சா.பரமானந்தம் அதிபர்

ந.கனகரெத்தினம் J.P ( எருவில் ரெத்தினம்)

ஐ.சுப்பிரமணியம் J.P

## கணனி வடிவமைப்பு

டனுஷான் கொமினிகேசன் எருவில்

கி.நிறஞ்சரூபன்

## அட்டையமைப்பு

அ.டினேஸ்

## பதிப்பு

முதலாம் பதிப்பு - 2014 வைகாசி

இரண்டாம் பதிப்பு - 2015 வைகாசி

மூன்றாம் பதிப்பு - 2016 வைகாசி

நான்காம் பதிப்பு - 2019 வைகாசி

## வெளியீட்டுரிமை

விருட்சம் சமூக மேம்பாட்டு அமைப்பு

# உள்ளடக்கம்


- வழக்குரை காவியம்
- ஊர்சுற்றுக்காவியம்
- குளுத்தி பாடல்

# வழக்குரை காவியம்

1. திருமருவு கைலாய மலையின் மிசை நிலவு புனை
சிவனும் உமையவளுமொரு சிங்காசனத்தில்
மருவுபொழு துமையவளெழுந்தடி பணிந்து
வள்ளலே மதிமரபில் வந்த தழிழ் மாறன்
வருவுதலில்லாமல் வருநுதலில் விழி கண்டு
வெட்கினேன் எனது துயர் விடையருளுமென்ன
தருமருவு மிதழி செந்தாமசேகரனும்
தையலுன் மன நினைவு தாமுயலுமென்றார்

2. முயலுமென விடைகொடா தவசிடையிருந்தே
முகவடிவில் மதியனைய முகமது சிறந்து
அயலில் வரு நாகமங்கலையென்னும் அணங்கை
அன்பினுடனே திருக்கண்ணருள் சுரந்து
புயலைமுன்னாள் விலங்கிட்ட திறல் வலுதிதன்
பொன்னுலவு நெற்றிக் கண்ணை மறை என்று
மயலறவுரைதிலகு சட்டைகனல் கொடுவந்து
மணிமுடி தரித்தரசர் மதுரை எரி என்றார்

3. என்றபணிவிடைகொண்டு கைலையங் கிரிநின்
றிறங்கியே விண் தெய்வலோக மதிலிருந்து
தண்டடன் திருமார்பன் முத்து மாளிகையிலொரு
சரடுகொண்டுளைகள் நூல் ஏணிதனில் இறங்கி
துன்டு மீனக்கொடிகள் வழுதிதிரு வாசலில்
சூதமாவின் கனிய தாய் உதித்தமயால்
இன்று மாயோர் தமக்கென்றே அருளியே தான்
இனிதான நுதலின் விழிதனை மறைத்தவளே

4. தவமனைய நுதலில் விழி மறையவும் குலவழுதி

தன்கைக்கனிதனைக் கொடு நடந்தே தான்

நவமணியில் பொன்னிலகு முத்துமாளிகையிலொரு பொற்பேழை

நடுவறையில் மூடிவைத்தந்த நாள் விட்டே

பவன முறமற்ற நாளிற்றிறந்து வழுதி

பார்த்த பொழுதே மதலையாய்க் குரவைகண்டு

கவலையொடு கணிதரை அழைத்தென்ன மாயம் நீர்

கட்டுரைமென்ன அவர் கட்டுரைத்தனரே

5. கட்டழகு தருமதலை தன்னாலுன் அரசுரிமை

கண்ணழகும் உம்முடை கமழ் மதுரை நகரும்

கெட்டிடுமெனக் கணிதர் சொன்னதையறிந்து

கிரணமணியார் பசும் பொன்னால் சமைத்த

பெட்டக மதுட்பட அமைத்து நதி வைக்கையம்

பேராற்றிலே விடவும் நீரோட்ட வழியே

மட்டறமிதந்து வந்தலை கடல் மீதோன்றி

மானாகர் மகளாக வளர்ந்த மாதாவே

6. மானாகர் மகளாக வளர்கின்ற நாளில்

வலியகொடு விட அரவின்மணி புனைபவள் இவள் என்று

மேனாளிலுள்ள படி அறிந்து மானாகரும்

வேல் வளவனைத் தொழுது விண்ணப்பமென்றார்

தேனார்தன் வதுவைக்கு நாகமணி உள்ளீடு

சிலம்பினாலே வதுவை செய்ய வொண்ணா தெனவே

காணாறுதாகி புயவளவர் கோனும்

மீகாமனையழைத்து நல்ல கனவரிசை செய்தார்

7. செய்து சில கப்பல்கள் கொடுத்தவர் விடுத்தார்
செத்தவர் பிழைக்கவரம் உத்தமியளித்தாள்
எய்தநரகிற் புகுந்த பேர்களனைவோரும்
ஈடழிவு இல்லாமல் நாகமலை சென்று
பையரவினைத் தொழுது நாகமணிதன்னை
பாலிக்க வேண்டியவர் ஆலித்து மீழ்ந்து
துய்யபுகழ் வணிகேசன் முன்வைத்திட மகிழ்ந்து
தொல்வரிசை மீகாமனுக்கருளி விட்டார்

8. விட்டுநல் வணிகர்குல மானாகர் மகளுக்கு
மிகுநாக மணிகொண்டு மகிழ்வோடு சென்று
எட்டோடிரண்டரைக்குள்ளான பசும் பொன்
சிலம்பிற்கு நாகமணி உள்தரிசிம்இட்டு
திட்டமுடனே பொருள் வழங்கு மாசாத்தார்
சிறுவனாங் கோவலற்கே மணம்முடிக்க
மட்டுலவு செந்திருவும் மாலயனும் போல்
வையகம் மதிக்க அவர் வாழ்ந்திருந்தனரே

9. வாழ்பொழுது சோழன் முன் நாடகம் நடிக்கும்
மாதவி தன்னால் மனது கோவலர் மயங்கி
நாளோரிர்வைக் காயிரத்தெண் களஞ்சிப் பொன்
நல்கியுள கைப்பொருள்கள் பற்றற இழந்து
ஆடரவின் மனியீடு சிலம்பாகுதல் விற்க
வாங்குவாரில்லையென மதுரை நகர் சென்று
நீள்தெருவில் விலைகூறி வருகோவலன்றன்னை
நேர் கொண்ட தட்டானும் நின்றெதிரே சொல்வான்

10. சொல்லரிது விலையிதற் கல்லாது கடல் வழுதி
தொல்லுலகில் உள்ளவர்கள் எவர் தருவரென்று
நல்லமணி வாசலளகாக நீர் வாருமிதை விற்று
நான் தருவேனென்றுகொடுபோந்த கம்மாளன்
தொல்லை முன்னால் விலங்கிட்ட மதிரேசன்
தேவி புனை பரிபுர திருடன் இவனென்று
கொல்லும் நீ கள்வனிவனென்று தட்டானும்
கும்பிட்டு நின்றபடி கொற்றவன் உரைப்பான்

11. கொற்றவனும் நம்முடைய சிலம்போ இதுவல்ல
குலமனைவி தன்கையில் கொடுத்தறியுமென்ன
திட்டமோடுரைக்க அவர் செம்பொற்சிலம்பைத்
தேவி நிகர்பாண்டிமா தேவிகையில் வாங்கி
மாற்றெனது பரிபுரமுமல்லயிது நாகமணி
மண்ணிலுள்ளோர் புனையவும் ஐந்தலை பெறாது
செப்பிடிர் மன்னருக்கு எனவந்து சேடியர்கள் சொன்னார்
கம்மியனும் அல்லவே என்றான்

12. அல்லவே செய்ததொழில் அடியேனறியேனோ
அண்ணலே பெண்மதியினால் அவர் உரைத்தார்
கொல்லும் நீர் கள்வனிவனென்று தட்டானும்
கூறும் மொழி யாராலும் முயர் கொற்றவர் மயங்கி
வல்லசீர் மேகநாதனை அழைத்திங்கு இவரை
வதையும் என மதயானை வதையாத தாலே
கல்லின் மேல் கனமழுவால் பிளப்பித்த
காரணங் கனவினிடை கண்ட கண்ணகையே

13. கண்ணருவி களபமுலை கருகி விள ஆயர் இட
கடிமனையகன்று தெரு மருங்கிலே நடந்து
தன்மருவு நிழல் வேங்கை தன்னிலிரு பிளவான
தன்கணவனைக் கண்டு கண்களிலறைந்து
மண்ணதனிலே வீழ்ந்து கணவாகோவெனவே
மரணமுறவேவந்த வகையறியவேதான்
விண்ணுலகுதனை நினைந்து பொன்னின் நூல் ஊசிவாங்கி
மீளவும் மெடுத்துயிரை மீட்டபத்தினியே.

14. மீட்டுயிரை வரவேது சொல்லுமெனவேதான்
வினவ வரு கோவலர் விரித்தினியுரைக்க
கேட்டுருவி நூலை நிழலில்கிடவும்என்றே
கிரணமணி யார் சிலம்பொரு கைதனில்ஏந்தி
நீட்டு தெருவிற்குளை வலக்கையிடை சென்று
நெற்றியில் கண் இடை நெருப்பு மழை தூவ
பாட்டணி மதம்பெருக வேம்பணிபுயத்தாள்
பார்த்தீபனிருந்த திசை பார்த்து வந்தனளே

15. வந்து தலை வாசல்தனில் நின்றவளுரைக்க
வழுதியு மெழுந்து திருவாசல்தனில் வரவே
கொந்தளக மயிர்குலைய நின்ற மயில்கண்டு
கொலைகாரனோ கொடுங் கோலரசன் நீயோ
என் கணவனைப் பிழைப்பித்தவனும் நீயோ
இச்சிலம்புக்கிணைச் சிலம்பெங்கே
தந்துபாருந்தேவி தனதோ இது எனதோ
சபையில் உள்ளோர்கள் இதை தாமுரையுமென்றாள்.

16. தாமுரையுமென்று கயல் நூபுரு மடிக்க
தரைதனில் அடித்திட தகர்ந்தது நெருப்பாய்
பொன் பொறி போலவே மணிவகை தெறித்து
புரவலர் நடுங்கியுயிர் போய்க் கதவடைத்தான்
தன்னருகில் நின்ற தட்டானையுமெரித்து
தடவமுலை தனைத் திருகி எறிய அது சென்று
மீனவனடைத்த கற்கத வேழையுமுடைத்து
வேந்தன் மணி மார்புருகி வீழ்ந்துயிர் இழந்தான்

17. வீழ்ந்துயிரிழக்க மதிரேசனை அழித்தும்
மெல்லியர்தம் மனதில் உரு வேகமமையாமல்
காய்ந்த கனலிட்டு மதுரையை எரித்த
கன்னிவரும் போதிடையர் கன்னியர் பணிந்து
வேதனை தணிக்க வேன்றே திருகு கொங்கை தனில்
வெண்ணைதனை அப்பியவர் கண்ணுற மகிழ்ந்து
போர்ந்த பொழுதே சீத்தலைச்சாத்துவார் வந்து
பூவையே நின் கோபம் ஆறிவிடுமென்றார்.

18. ஆறிநின்றே தெய்வலோகமதை நோக்கி
அங்குநின்றேழுபெண்களப் போதிறங்கி
மாறுலவுகைக்குள் வலக்கையிடையேந்தி
மாதருடன் கூடி மஞ்சல் நீராடி
தாறுமலர் சூடி நல்ல பாக்கிலை அருந்தி
தையல் நின்றம்மானை தானாடியேதான்
மாது திருவுள்ளம் குளிர்ந்திருந்தாள் இந்த
மண்ணினுள் ளோர்களும் வாழவென்றேதான்

19. வாழவென்றே அபயபதமோடு வளிதி
வாழை செங்கழுநீர் மலருடன் இருக்க
தாள் கொண்ட சீத்தலைச் சாற்றுவார் வந்து
தம்மாலே இவ்வுலகமீடேற வேணும்
நாளும் நீர் புவில் வரு நாள் ஏதெனப் புகழ
நண்ணுதல் வைகாசிதனில் நான் வருவேனென்று
நீளும் ஒரு கலை மண்ணிலே நிறுத்தி
நேரிளையும் வானுலக ஏறி நின்றனளே

20. நேரிளையும் ஒருகலையும் நான்கு கலையாகி
நிலவு போலேநின்று நிறைபூசை கொண்டு
பாரிலுள்ளோர்களிட நோய் பிணி தவித்து
பக்தி செறி தம்பிலுவில் ஊர்தனிலிருந்து
ஏர்செறியும் ஐங்கோணா மைக்கடவை
கார்ஏறு நகர்எருவில் ஆனதம்பிலுவில் எழில்வீரமுனை தனிலும்
பேரான காரைநகர் எங்கனுமிருந்து
பெருமை செறி வரமளித்து இனிது காப்பவளே!

# ஊர்சுற்றுக் காவியம்

01. வீசுகர மேகநிற வேத நுதலார்கருணை
மேவுமத வாரண வினாயக வினோதா
சேசுருதி பாரதழிழ் மேருவினில் கோடுகொடு
சேம முறவேயெழுது சேர் கருணையோனே
கூசுமதி சேர்நுதலி கோமள வல்லிக்கோர்
கொஞ்சு மதலைக்கினிய குஞ்சர முகத்தோன்
பேசு தமிழின் கதைகளே பாடுதற்குமொரு
பிழைகள் வராமல் அருள் பேழைவயிறோனே

02. சீரிதானோ பணிகாரம் அவல் எள்ளுருண்டை
செந்தேனுடன் பயறு செவ்விள நீரும்
வாரியே குடவயிறு தன்னிலே வைக்கின்ற
வள்ளலே யானைமுக வரத நற்பரனே
நாரிபா கன்றிருக் கொம்பனையே நம்பியே
நாளும் அடியார்கள் வினைபோயகல வேணும்
பாரிதாய் எம்மைப் பரிந்தடிமை கொள்வாய்
பாரதம் கோடதனி லாளெழுது வோனே

03. பருவகம் புயர்தனம் பொழியும் மங்கையரிடம்
பலவிதம் தொழுது செந்தகமனும் திருவெனும்
குருவெனும் பொருள் நினைந்திருபதம் பெறவுமென்
கொடி மலர்ந்தடியேனை அடிமை கொண்டாள்வாய்
இருதடங் குவடுதங் கிரிமகிழ்ந் துலகில்வந்
அழகு செஞ்சடையிலம் புவிபுனைந்த புவியின்
திருவலம் பலவுமம் பிகைமகிழ் துலகு
திகழ்நடம் புரிந்தெழும் சிவ சிதம்பரனே

04. விதம்பட இரண்டருகும் வேதமிசை பாட
விதங்கமல குங்குமம் குவிர் குவிரென்ன
சதங்கையொடு தண்டைகள் அலம்ப முடிமீதே
சலம்சல சலம்சல வெனும் கொடிததும்ப
பதங்களொடு தொந்ததோம் தோம் எனஇசைப்ப
பதஞ்சலி பராக்கிரம பதத்தைமுனி காண
சிரம்பர சிதம்பரவெனும் பெரியவெண் கோடு
திரண்டிட சிவந்தவினை சிந்தியோ டிடுமே

05. தடவரைகள் கிடுகிடென வடிவேலை ஏவுநற்
சஞ்சலாப் படாமுடி தற்பரா சண்டன்
உடலினைகள் நெறுநெறென விழியினைகள் பிதிங்கிட
உலகுபுகழ் கிடுகிடென உம்பர் உலகெல்லாம்
அடயலர்கள் மடமடென நிமிடமிட இந்திரர்கள்
அழகு நடனமானதொரு மயிலின்மிசை ஏறும்
கடலலறு படநெடிய வடிவேலை ஏவுநற்
கந்தர் இருமலரடிகள் கனவில் மறவேனே

06. திருவை உமையவளும் மழுவிடையரனும் ஒருநாள்
தெளிய உபதேசமருள் வடவை முகமதனில்
கருவரிய மதுரகமும் தினமுமுமை குழல்சொரிய
இருசெவியில் விழஅரனு முமை முனிவார்
சரிசல திமிசையெறி மகரமென வலைகயிறு
தனையுமிரு தவிடுபொடி செய்தூர வரையும்
உருவாகி விடுகுமரன் உறுதிசெறி கதிரைநகர்
ஒருமுருகர் எனவினைகள் உறுதி செடிபுகுமே

7. திருமருவு வளரு முண்டகமும் முழுநிலவும்
செறிவாவியும் புதிய மதுமாலை மலரும்
தருமேவு சோலையும் சாந்து குங்குமமும்
தனதான பதியெனவே ஓது கோமயிலும்
கருதரிய திருநாடு எமதுநகர் எனவே
கனல்மீதில் ஏற்ற சிலை வேடனான
மருவருவு தொடரணைய கதிர் காமத்திலுறை
மலரடிகள் ஒருபொழுதும் மனதில் மறவேனே

8. பலகனிகள் சொரிதினைகள் விளைபுனம் தனிலடரப்
பகர்கிளிகள் புறாவினொடு பலகனிகள் கடிதூண்
அலைகயிலை நிகரணைய அழகுடைய விழிவள்ளி
அவளை மணம் வருகுமொரு தவசிவடிவெனவே
வலைகுறவன் எதிர்கிழவன் எனபுவிகள் அடிகள்தொழ
வருபவர்கள் இருகைதொழ வழமைசெறி கொடுபோய்
உலகுபுகழ் செறிகதிரை நகரில்வரு குமரரென
ஒருமுருகர் எனவினைகள் உறுதி செடிபுகுமே

9. பரகதியை யாவையும் நாவிலுறை நித்தமும்
பங்கயச் செல்வியை பவள வாயாரைக்
கருதரிய இவைவிழி ஓது கண்ணாளைக்
கற்பூர மேனி தனில் ஒப்பாரில்லாளைக்
பதுமமுகில் அனையதொரு குங்குமக் குழலியை
பாடியிரு சங்கீர்த பார முலையாளைக்
சரஸ்வதி என்னுடைய நாவிலும் கனவிலும்
தமிழ் வளர்த்தாளை ஒருசற்றும் மறவேனே

10. திங்கள் போலும் திருமேனி உடையாளை
செந் தாமரைக் குலத்தாளை ஒப்பாளை
பொங்கு புனலாலே எழுந்த நற்திருவே
பொய்யன்றி மெய்யாக வந்து உதித்தவளே
தங்கள்பழி கொள்ளென்று பாண்டியனிடம் சென்று
சத்துரு சடாமுடித் துயிர்மீள வந்தாய்
அங்கோணாமைக் கடவை தங்கு கண்ணகையார்
அடித்தாமரை பாதமலர் நாளும் மறவேனே

11. வட்டவாரிக்கடல்கள் சூழ் உலக மீதிலே
வாழும் மூலஸ்த்தான தேவதைகள் எனவே
இட்டமாய் நற்கனிகள் சொரிந்திடும் பெண்பனையை
இன்று முதல் ஆண்பனையதாய் நினைந்தவளே
பட்ட தொரு பாலகனையும் பிழைப்பித்தாய்
பாண்டியனை வென்றுபழி மீண்டு கொளவந்தாய்
மட்டுலாவிய சோலை அங்கேணாமைக் கடவை
மருவு கண்ணகையையென் மனதில் மறவேனே

12. கார்பெற்ற விரிதிரை கடல்மீது பெட்டகம்
கண்டு மானாகர் உடன் மாசாற்றுவாரும்
பேர்பெற்ற பெட்டகம் எனக்கொனவும் மாசற்றார்
உள்நிதி எனக்கென்று மானாகரும் உரைக்க
பேர்பெற்ற மாசாற்றரைக் கண்டு நாணி
பின்னிடவும் மானாகர் முன்னிடவரும் சொல்
சீர்பெற்ற தம்பிலுவில் ஊர்வாழ வருகின்ற
செல்வி கண்ணகையை என்சிந்தை மறவேனே

13. சுட்டியாய் உயர்பொன்னின் ஆறதனில் மூழ்கியே
தோகைமாதேவி நீர் ஆற்றிலோர் புதினம்
எட்டியே நீர்சுழியில் வண்டு பூவாசத்தை
இனி துண்பதற்கு உவமை ஏதெனப்புகளீர்
செட்டிதனை ஓர்மழுவினால் வதைத்திடும் அம்மை
சிந்தை யுற்றங்கு வாவென் றழைத்தருளும்
பட்டிமே டதனில்வாழ் கின்றகண்ணகையை திருப்
பாதமலர் நாமமொரு நாளு மறவேனே

14. சேர முனையில் திரவியங்களை அழைத்து
மாதவிக் களித்திட முற்றென அறிந்து
ஆரமுனையில் சவடி பொற்பணிகள் செப்பில்இட்
அவர் கையில் கொடுமென்ற அன்னமின்னிடையே
பாரமுனை ஒற்ற திருவேல் விழிக்கரும்பென
பணிவோர்கள் பிணி தீர வருபேடைமயிலாள்
வீரமுனை ஊர்வாழ வருகின்ற கண்ணகையை
வெண்கமலப் பாதமென் சிந்தை மறவேனே

15. மட்டுலவு பொற்பதி புரத்து மதுரைப்பதியில்
வாழும் உயர்செட்டியை வதைத்திட அறிந்து
இட்டபெருமட்ட கிரியைச் சரி சொல்
வட்டமுலையைத் திருகி மதுரைநகர் சுட்டரசழித்தாய்
திட்டென அகத்தடிமை பணிவிடைக் குதவி
சேரவே இக்கருணை நாடியருள் புரிவாய்
கட்டுடன் நடந்துமுயர் காரேறு சோலைவளர்
கண்ணகையை எண்ண வினை காதமோடிடுமே

16. வண்டு நிகரானவிழி கெண்டை நிகரானமொழி
வாலை எதிர்தோனுதல் மடந்தை எதிர்சீறி
தண்டிகை வழக்கதனை வென்றுசெய்த பாண்டியன்
தன்னையும் எரித்திடையர் தன்சேரி காத்தாய்
எண்டிசையில் உள்ள பரிபாலரொடு போடிமார்
எழில்வீரர் மற்றுமுள எல்லோரையும் தினம்
கண்டு பணிகின்றதொரு காரேறு சோலைவளர்
கண்ணகையை எண்ண வினை காதமோடிடுமே

17. சிலையொற்ற புருவத்தி கணையொற்ற நயநெற்றி
சிவசித்திர வடிவொற்ற திருமுத்து நகையாள்
மலையொப்பன நவரெட்ண வடிவொற்ற தனத்தி
வஞ்சிக் கொடியிடைச்சி மதுரைச் சொல்மொழியாள்
புலைமித்திட முடிக்கும் அடிமை கொள் தானவர்கள்
புகழ் பெற்று வாழ நற்கருணையது புரியும்
கலைமுத்து தமிழ்மிக்க காரேறு சோலைவளர்
கண்ணகையை எண்ண வினை காதமோடிடுமே

18. வில் முனையில் நிகர் ஒற்ற
விழி சித்திர மிக்க தமிளோர்கள்
சொல்முனையி லென்னவே கட்டுடன் நடத்திவரு
சுகமுற்று வாழ்வுதரு வரிசை பொற்கொடியாள்
நெல்முனையில் மிகுந்தறம் பெருகமானிடர்கள் வாழ்
நித்தமும் திங்கள் மும்மாரி பொழிகின்ற
கல்முனை நகருக்குள் வாழ வருகின்ற
கண்ணகையை எண்ண வினை காதமோடிடுமே

21. எத்திசையும் மெய்ககவே தேருடன் திருநாள்
என்றுமோர் ஆண்டினில் நடத்தி யாவரையும்
குற்றமற மானிடர்கள் எல்லோரையும் தினம்
குறைவற நடத்திவரு குணரெட்ண மயிலே
கொற்றவனை வாதாடி அன்று வென்றாயர்
குலமதனை அஞ்சலென்றிடும் அன்ன மின்னே
உற்ற புகழ்சேர்கின்ற வெற்றி செறிபாண்டிருப்பு
ஊர்வாழ வருகின்ற உலக மாதாவே

22. காரணி நாரணி காளி கங்காளி
கண்ணன் சகோதரி வண்ண மகமாரி
பூரணி நாரணி பொன்னின் மாமங்கையே
புகழ்மேவும் பூலோகம் வாழும் நாயகியே
ஏரண்ணி முக்கண்ணி வேத நாயகியே
ஏழை அடியார்கள் தமை ஈடேற்றுவாயே
வீரமா காளியே தெட்சணா தேவியே
மேவரிய கல்லாறு வாழும் நாயகியே

23. புகழ்மேவு மானாகர் மகளான திருவையே
பூவையே உனை நினைந்திட வந்தவினைகள்
துகள்போலவே பறந்திடும் உனது கற்பால்
சுந்தரம் சேர்கின்ற சந்தணக் கிளியே
நிகழாமல் அடிபேணி அடியவர் தமக்கென்று
நிறை செல்வமே கொடுத்தருள வந்தவளே
மகிழூர்தன் நகர்வாழ வருகின்ற கண்ணகைதன்
மலரடிகள் ஒருபொழுதும் மனதில் மறவேனே

22. பரிவுறுசொல் இடையர்தம் அகமதனில் இருமெனவுமொரு
பரிபுரம் தணைதெருவில் விலைசொல்ல முன்னாள்
பெரியதொரு தெருவினிடை எதிர்வரு கொல்லன்
இடருபிழைசெய் கள்வனென மாறனெதிர் கொடுபோய்
தெரிசென மேல் அறிவினொடு குழல்அவிழ
முலைதிருகி மதுரைநகர் எரி செய்த
கரியசுரி குழலன்னமின்னிடையே எருவில்நகர் வாழ்
கமலமயிலிரு பொன்னடிகள் கனவில் மறவேனே

23. இடமிகு பொன்னாடரங்கதனில் உயர் சோழன்முன்
எழில்கொள் எனிகோலமும் பூட்டிமாதவி தன்
குடமுலையின் மேல் நிறைந்திடு வடவுலாவுதனம்
குதிகள்செய் நாடகம் கண்டு கோவலரும்
மடமினொடு ஆசை கொண்டரிய தெருவீதியில்
வருவிரக தாகவே என்றுள மகிழ்ந்து
திடமிகுசொல்லால் உயர்ந்திடும் எருவில்நகர் வாழ்
செந்திருவை நாளும் என்சிந்தை மறவேனே

24. பாருலகில் உள்ளவர்கள் தாழ் பணிந்தேற்ற
பரிவுசெறி ஆச்சியர் இடந்தனில் இருந்து
சாருலவு சயனமதிலே கனவு கண்டு
தன்மனதில் அதிகதுயர் வந்து சேர்ந்திடவே
ஏருலவு என்கணவர் கோவலர் தமக்கு
ஏது துயர்வந்ததோ என்று வழிசென்ற
சீருலவு களுவாஞ்சி நகர்குளக்கட்டில் வாழ்
செல்வி கண்ணகையை என்சிந்தை மறவேனே

25. மலர்மேவு குளிர்சோலை வளர்கோல மயிலாள்
வரிமேவு குழல்சோலை வருகீத மொழியாள்
தலமேழும் அறியாத வணிகேசர் குலமீது
தனிலேயோர் அவதாரம் தருவாய் பெண்ணமுதாய்
பலமேளம் முரசோடு தவில்தாரை
பலநாத சர ஒசை பல நாளுமதிர
நலமேவு செட்டிபாளைய மீதில் வாழ்கின்ற
நாயகிதன் நாமமொரு நாளும் மறவேனே

26. எண்ணமுள்ள பரிவான வீரர்களுமே தழைத்தே
எழில்பெற்ற இராசசிங்க மன்னனும் வாழ்க
திண்ணமுடனே புவிகள் எங்கும் தழைக்க
திங்கள் மும்மாரிமழை பொங்கநிதம் எங்கும்
வண்மையுள்ள முற்குகர்களும் கன்று காலியும்
வாழ்கவே வரமருள வந்த மண்முனையூர்
கண்ணகையை என்னுடைய நாவிலும் கனவிலும்
கருதவினை ஒரு கோடி காதமோடிடுமே

27. உற்றபுகழ் சேர்கின்ற செட்டி வேளாளரும்
உயர்வுற்ற முற்குகர்கள் உடன் மற்றுள்ளோரும்
கொற்றவர்கள் வீரர் பரிபாலர்களும் ஆயிரம்
கோடிகாலம் வாழ்க நாடியருள் புரிவாய்
செத்ததொரு வேளாண்மை விளையவே மழைவெள்ளம்
பெருகவே திங்கள் மும்மாரி பொழிகின்ற
கற்றவர்கள் வந்தாறுமூலை நகர் வாழ்கின்ற
கண்ணகையை எண்ண வினை காதமோடிடுமே

28. சீர்வணிகர் பெருமாள் சிலம்பு விலைகூறத்
தெருவினிடை தட்டானும் எதிர் கொண்டுவரவே
பாராளி மீதிலே கள்வன் இவனென்று
பழிதரச் சொல்லியே வழுதி முன்னுரைக்க
ஏர்மேவு தனம்திருகி எறிந்து மதுராபுரியில்
இந்துகுல மன்னனை எரித்த நாயகியே
கார்மேவு சோலைசூழ் நிலாப்பளை வாழ்கின்ற
கண்ணகையை எண்ண வினை காதமோடிடுமே

29. தவமேசெய் அடியவர்கள் பாதமலர் சூழ
தமிழோர்கள் இசைபாட விடையரனும் ஒருநாள்
உபதேசம் ஒருநாளும் மறவாமல் அடியேனை
உரமீது தவறாமல் உணர்வேகொள் திருவே
சிவனார்தன் அருளாலே உயர் பூவுலகில்யான்
திருநாளில் அருள்பூசை தினமேகொள் திருவே
நவமாமணி உலவு நல்காமநகரில் வாழ
நாயகிதன் நாமமொரு நாளு மறவேனே

30. அங்கோணாமைக்கடவை காரேறு நகர் எருவில்
ஆனதம்பிலிவில் எழில் வீரமுனை மகிழுர்
மங்கைசேர் பட்டிமே டுயர் செட்டிபாளையம்
வந்தாறுமூலை நகர் மற்றுமுள்ள பதிகளும்
திங்கள்சேர் ஒற்ற நுதல் அங்கோணாமைக்கடவை
திவ்விய மாகவிளை யாடியெப் பொழுதும்
எங்குமாய் நிற்குமொரு மங்கை மாதின்பெருமை
என் நாவிலும்கனவிலும் என்றும் மறவேனே.

# கண்ணகி அம்மன் குளுத்தி

சீர் பொருந்தும் ஐங்கரனே! திருமாலின் மருகோனே
கார்பொருந்தும் யானைமுகக் கணபதியேகற்பகமே
பார்பொருந்தும் கண்ணகையார் பழிவாங்கிக்குளிந்தகதை
ஊர் செழிக்கப்பாடுபடுகிறேன் ஒருபிழையும் வராமல்

ஒருபிழையும் செய்யாதஉலகுபுகழ் கோவலரைப்
பெருமழுவால் கொல்லுவித்தபெருமாறன் தனையெரித்துக்
கருதரியஆயர்மனைகனல் மூழ்கச் சாபமிட்டு
இருமுலையும் குளிந்தகதையானுரைக்கக் காரணமே

## நடை

காரணியும் கொடைவாழ்வணிகர்
காதல் மிகுந்ததோர் பாலகனார்

சீரணியுந் திரு மாமணிநங்கை
செல்விகுலத்துயர் தோன்றினாளே

மன்னுயர்மாநகர் தன்மகளார்
மாசாத்துவார்க்குமருமகளார்

பொன்னுளதுமாதவிக்குத் தோற்றுப்
போகைக்கிசைந்தார் கணவரோடே

கொஞ்சியசெஞ்சோற் கிளிப்பிள்ளை - தன்னைக்
கொண்டுசென்றங்கவர் கையிற் கொடுக்க

வஞ்சகர் நெஞ்சில் வளருமென்றே
வந்தாரேகோவலர் முன்புசெல்ல

தீதறுகாதம் பலகடந்து
சிறந்தகவுந்தியோடங்கிருந்து

மாசறுவல்வினைதீரவென்று
மனையறிவோமெனப் போயினாரே

வைகைக் கரையில் இனிதிருந்த
மாதுவணிகரும் தாழ்ந்தன்றே

தையல் வருந்தக் கவுந்தயனாரும்
தார்வணிகர்க்கொரு தீங்கிலையென்றார்

ஐயனேஉந்தன் அடிபணிந்து
ஆதுளர்சேர் குளிரவென்று

வைகாசித் திங்கள் வருவனென்று
மதுரைக்கிசைந்துவிடைகொடுத்தாரே

ஆன்னம் குருகு புறாவினங்கள்
அவைதுணையாக இருந்தபோது

பொன்னின் மணிச்சிவகைதனிலேறிப்
போந்து இடையர் தெருபுகுந்தாரே

முதிரும் பழவினை மூண்டலுமே
மொய் குளலார் தமையங்கிருத்தி

மதுரைபுகுந்துசிறிது நாளில்
வாணிபம் செய்வோம் எனநினைந்தாரே

கண்ணகிகாற் பொற்சிலம்பதுகொண்டு
கருத்துடன் நல்லோர் கடைபுகுந்தாரே

எண்ணமொன்றறியாதகோவலரும்
ஏறாய் விலையேற்றம் சொன்னவாறே

விற்கும் சிலம்புவிலைபெரிதென்று
வேளாளர் கொள்ளாமல் மீண்டும் போத்த

தர்க்கம் பெரியதோர் தட்டானார்குத்
தன்னகச் சிலம்பொன்றுகாட்டினாரே

நிற்க இவ்வாசலில் நிற்கவென்று
நீணிலைவேந்தர்க்கெடுத்துரைக்க

கொற்றச் சிலம்பொடுகள்வனாரைக்
கொடுவந்துநின்றுவினவினாரே

மரற்றமொன்றறியாதமன்னவனாரும்
வணிகனைக் கொல்வோமெனநினைந்தாரே

குற்றமொன்றறியாதகோவலனாரைக்
கொடுமழுவாலேபிளப்பித்தாரே

காதலன் பட்டகடுந்துயரம்
கனவிலேகண்டுகருங்குளலார்

மாதவம் செய்துதவம் புரிந்து
மதுரைஅழிப்போம் எனநினைத்தாரே

மேலானதோழியும் மாதுரியும்
மெல்லிநல்லோர் தமைஅங்கிருத்தி

தூய மொழியாரேநீசொன்னமாற்றம்
தொல்லுலகோர்க்கு முடியாதென்றார்

கூறு வேறானஉடலைப் பொருத்திக்
கொம்பனையாள் உயிர் மீட்டுக்கொண்டு

பாண்டியன் செய்தபழிகள் பாவம்
பார் மேலெழுந்தபழிமதுரை

மூண்டவடவகனல்தனைமுட்டி
முளக்காயெரித்தாளேமொய் குளலாள

தானுமாதோழியும் மாதுரியும்
தன்னிலொன்றாகியதார் கோதையும்

வானோர் எதிர் கொள்ளவையகமுய்ய
மங்கைமகிழ்ந்துலகேறினாளே

ஆறிநடந்தாள் அணியிளையாள்
ஆனதிருப்பதி வாசலூடே

தேறிநடந்தாள் அணியிளையாள்
செல்விதிருப்பதி வாசலூடே

கந்தஞ் சொரியுங் கனங் குளலார்
கணவனுடன் பிரியாதவாறே

இந்தவணிகனிடர் தீரவென்று
ஏந்திளைஅம்மானைஆடினாரே

பூ ந்தடங்கன்னியார் தாம்புடை சூழப்
பொன் அனையார் தமைஅங்கருத்தி

கூந்தல் மடமயில் சாயல் நல்லாள்
கோதைநின்றம்மானைஆடினாரே

போரானவேல்விளிபொன் அனையாள்
புவனமுழுவதும் புரிகுளலாள்

ஆரணமேத்தஅருமறைஓத
ஆயிளைஅம்மானைஆடினாரே

சித்தங்கலங்கவேதென்னவன் கூடலைத்
தீக் கொண்டுசுட்டுச் சிறப்பைஅழித்து

பத்தினியென்றுபலபேரும் போற்றிப்
பைந்தொடிஅம்மானைஆடினாரே

விற்புரவவேல்விழிமின்னனையார்
மேதினியெங்கும் குளிர்ந்துவாழ்க

கற்புடையாள் என்றுசொற்படைத்த
காரிகைஅம்மானைஆடினாரே

கொந்துசெறிந்தகுழலசையக்
குவலையம் எங்கும் குளிர்ந்துவாழ்க

அந்தரவானத் தரம்பையர் போற்ற
ஆயிலைஅம்மானைஆடினாளே

நான் மாறன் கூடலில் நான் மறைஓத
நாற்றிசைஎங்கணும் கொண்டவேந்தன்

கோமாறன் தன்னைக்கொலைவிளைத்த
கோதைநின்றம்மானைஆடினாளே

ஆலிலைபோலும் அணிவயிற்றாள்
அங்கையற் கண்ணுடைஆயிலையாள்

சாலிவிளையமழைபொழியத்
தார் கோதைஅம்மானைஆடினாரே

பாங்குபுகழ்செறிதார்கோதையும்
பத்தினிமார்.தெய்வகன்னியர்தாமும்

பங்கமலத்திருமாமணிநங்கை
பொன்னின் அம்மானைபுரிந்தாடினாரே

கன்னியர் தங்கள் மனைவிளங்கக்
கற்றவர் தங்கிளைவாழவென்று

சென்னிவளவன் தன்மாநகரில்
சேயிழைஅம்மானைஆடினாரே

கைமானைஏந்திய காரிகையர்
கண்டுமகிழ்ந்து கனங்குளலார்

அம்மானைஏந்தியஅங்கையற் கண்ணி
அம் பொற்சிலம் பொலிஎம்தலைமேலே

வேறு

ஒருமாப் பத்தினிவந்தாள்.உலகேளும்
தழைத்திட வந்தாள்.வந்தாள்

திருமாணிநங்கைவந்தாள் எங்கள் தேசம்
தழைத்திட வந்தாள் வந்தாள்

இப்பாரிடந்தனில் வந்தாள்:
இடைச் சேரிதழைத்திட வந்தாள்.வந்தாள்

ஒப்பானபலகர்க்கன்பாகவே.
ஒருமாப் பத்தினி வந்தாள்.வந்தாள்

வீறாடும் பத்தினிவந்தாள் -
விளையாடும் வீதியில் வந்தாள்.வந்தாள்

மாறானபண்டியன் மாளவென்று
வலமானகொங்கைஅரிந்தாள் வந்தாள்

பாராளுமென்மொழிவந்தாள்
பரிந்தோர்கள் தன் கினைதாங்கவந்தாள

மேலானவேல் விழிவந்தாள்
விளையாடும் வீதியில் வந்தாள்

கொற்றவன் முன்னாள் பிழந்துபோட்ட
கோவர் அங்கத்தைக் கூட்டக் கூட்டி

மற்றவன் செய்த விபரம் கேட்டே
மாதுநல்லாலிவன் வந்தாள்.வந்தாள்

ஆணிப்பொன்னாலேஅமைத்தசிலம்பை
அங்கம் வருத்தமுறித் தெறிந்து

மாணிக்கம் காட்டி வளக்குவென்ற
மாது நல்லாளிவள் வந்தாள் வந்தாள்

ஆதுலர் தம் கிளை வாழ வென்று
ஆதிரைநாள் வந்துதித்தாள் வந்தாள்

காவலன் செய்த கடும் பிழைக்குக்
கனலைப் பரப்பிமதுரை எரித்து

ஏற்றம் மிகுந்ததோர் பாண்டின்தன்னை
இழுக்காடிவென்றவள் வந்தாள வந்தாள்

மாற்றம் மிகுந்ததோர் மன்னவன் தன்னை
வளக்காடிவென்றவள் வந்தாள் வந்தாள்

கானாரும் மாலைகுளல் சரிய
காடும் சுனையும் பலகடந்து

மீனவன் செல்வம் அழித்தகோவம்
வெஞ்சபர் வேல் விழிமாதேஆறாய்

கற்றவர் தன் கிளைவாழவென்று
காசினியெங்கும் குளிந்துவாழ்க!

கொற்றவன் செல்வம் அழித்தகோலம்
கோலமழகியமாதேஆறாய்

கொஞ்சுபரிபுரத்தாளினைநோகக்
கோவலரோடு மதுரையில் வந்து

பஞ்சவன் செல்வமழித்தகோபம்
பாலாருமென் மொழிமாதேஆறாய்

வாடாதபூ ங்குளல் சோரநடந்து
வஞ்சியரோடும் மதுரையில் வந்து

கூடலன் செல்வம் அழித்தகோவம்
கோலமழகிய மாதேஆறாய்

விழிகள் இரண்டும் அனல்சொரிய
வேகத்துடனேமதுரையில் வந்து

வழுதி மதுரபுரிஅழித்தகோபம்
வஞ்சமர் வேல்விழிமாதேஆறாய்

ஆமல்ல என்றுஆராய்ந்துபாராமல்
அப்பொழுதேசெட்டியை வெட்டுவித்த

சோமகுலமன்னன் தனில் கொண்டகோபம்
தோகை மயிலனையாரேஆறாய்

சித்தங் கலங்கிவணிகேசன்பட்ட
களங் கண்டுளத்தேசினத்தைஅடக்கி

சந்திரகுலமன்னன் தனைக்கொண்டகோபம்
சாய மயிலிணையாரேஆறாய்

வேறு

காளி புடை சூழக் காவிரிப்பூ ம் பட்டினத்தில்
வாழ் வணிகர் தம்குலத்து மாதே குளிர்ந்தருள்வாய்

இமாவேம்பின் கீழெ இருந்துவருந்தாமல்
வளமை பெரிதுடையமாதே குளிர்ந்தருள்வாய்

மீகாமனுக்குமிகுந்தவரம் கொடுத்து
நாகமணி வாங்க நயந்தாய் குளிர்ந்தருள்வாய்

சொற் பெரியமாநகர் தூய்யகுலத்தே உதித்துச்
சார்மணித்தான் அணிந்ததாயே குளிர்ந்தருள்வாய்

மாதவிக்குப் பொன்தோற்றுவாழ்வணிகர் தன்னுடனே
காதலித்துப் போனதொருகன்னி குளிர்ந்தருள்வாய்

காவிப் பூ ம்பட்டினத்தைக் கைவிட்டகன்றபின்பு
பூ விரியும் சோலை புகுந்தாய் குளிர்ந்தருள்வாய்

சாற்றரிய தக்க கவுந்தியனார் தன்னுடனே
புத்தமலர்ச் சோலைபுகுந்தாய் குளிர்ந்தருள்வாய்

ஓடுத்திலேறிஉயர்காவேரிதான் கடந்து
தேடேரியதென் மதுரை சென்றாய் குளிர்ந்தருள்வாய்

கொக்கினமும் புள்ளும் குரலோசையும் கேட்டுத்
தக்கவழிநடந்த தாயே குளிர்ந்தருள்வாய்

தென்னம்பழம் சொரியத் தேமாங்கனிஉதிர
வன்னிவழிநடந்தமாதே குளிர்ந்தருள்வாய்

கொற்கைப் பதிதனக்குக் கோவலனார்பின்பாக
துர்க்கைப்பதிநடந்தமாதேகுளிர்ந்தருள்வாய்

மடைமதிற் கயல்பாயும் மதுரைமாநகரமதில்
இடையர் அகம்புகுந்தஏந்திளை குளிர்ந்தருள்வாய்

பூ ட்டிக்கிடந்ததொருபொற்சிலம்பைத்தானெடுத்து
செட்டிகோவலார்பின்னே சென்றாய் குளிர்ந்தருள்வாய்

சேரக்கனாவைத் திரும்ப இடைச்சிகுரைத்து
சீர்மதுரைஉள்ளாகச் சென்றாய் குளிர்ந்தருள்வாய்

தன்கணவன் பட்டகளம் தேடித்தான் நடந்து
அன்புடன் சென்றாருயிரைமீட்டாய் குளிர்ந்தருள்வாய்

தட்டான் முன் கொல்லுவித்ததலைவரைக்கண்டு
பட்டீரே? ஏன்றமுத பாவாய் குளிர்ந்தருள்வாய்

கூறும் மொழியும் குரலோசையும் கேட்டு
ஏறும் விமானத்தெழுந்தாய் குளிர்ந்தருள்வாய்

மன்னிய வேகத்தை மனத்துள்ளே தானடக்கித்
தென்னவன் தன் வாசலிலேசென்றாய் குளிர்ந்தருள்வாய்

தீதறியாக் கோவலரைத் தென்னவனும் வெட்டுவித்து(து)
ஏது குறையாக என்றாய் குளிர்ந்தருள்வாய்

வாளைஎடுத்துவலமுறையைத்தானரிந்து
தோளாடையாகத் துணித்தே எறிந்தாயே

ஏழகதவோடிஅடைத்தானேபாண்டியனும்
ஏழகவூ டுருவிமார்புருகத் தைத்ததுவே

பண்டைப்பழியெனவே பாண்டியனும் போய் விழுந்தான்
கொண்டாரேகண்ணகையார் கோவலனைக் கொன்றபழி

தட்டான் பொடியாகத் தார்வேந்தன்நீறாகச்
சுட்டழித்துப் போட்டதொருதோகாய் குளிர்ந்தருள்வாய்

எல்லைப்படும் பழிக்கு எண்ணவொண்ணாப்பழிவாங்கி
சொல்லியமாமதுரை சுட்டாய் குளிர்ந்தருள்வாய்

மதுராபுரித் தெய்வம் வாய்மாற்றம் தான் கேட்டுச்
சதுராகவேகம் தணிந்தாய் குளிர்ந்தருள்வாய்

ஆயர் குலப்பாவாய் எம் அன்னமேதார்கோதாய்
தூயவன்தன்சேரிசுடாதேகுளிர்ந்தருள்வாய்

எச்சேரிவேகினும் இடைச்சேரிவேகாமல்
பட்சேரிவேகினும் பறைச்சேரிவேகாமல்

என்றீதுசெய்த இயல்மாறன் மதியழித்து
உன்முலைகுவிர்ந்தாப்போல் நீயும் குளிர்ந்தருள்வாய்

மதியோடுசெய்த இயல் மாறன்பதியழிக்கப்
பொதுவார் இடத்தினிலேபோனாய் குளிர்ந்தருள்வாய்

அரிந்தமுலையால் அவர்பழியும் தான்வாங்கி
புரிந்தாயர் தன்பதியில் போனாய் குளிர்ந்தருள்வாய்

விரைந்துமனைபுகுந்துவெண்ணெய்
தனைஅள்ளிவந்துஅரிந்தமுலைதனிலேஅங்கலும் அப்பினளே

கோவலரைநீங்காதகொம்பேளிர்ந்தருள்வாய்
வாராய்: புறாவேவளர்மதியைக்கைதொழுவோம்

ஓதாய் புறாவினமேலும் நமசிவாயவென்று
கோவலப்புறாவே! கொடுவாராய் வெற்றிலையே

மாடாப்புறாவேவளர்காலிவெற்றிலையே
அன்றனையநோய்பிணிகள் இன்றே அகன்றோட

நன்றாய் விமானம் நயந்தாய் குளிர்ந்தருள்வாய்
கூலதுகடந்து கோவலரைத்தான் கூட்டி

ஏறும்விமானத்தெழுந்தாய் குளிர்ந்தருள்வாய்
தன்கணவன் பட்டதிசையனைத்தும் தான்கடந்து

பொன்னுலகம் வீற்றிருக்கப்போனாய் குளிர்ந்தருள்வாய்
தேவர்களெல்லாம் திருவானகத்தேரேறி

கற்பதித்த தூண்போல் கலங்கார் மதியனையார்
நெற்பதித்த தூண்போல் நெருங்கார் மதியனையார்

தேடரிய இக்கதையைச் சிந்தைதனிலுணர்ந்து
பாடினோர் வாழி.படித்தோர்கள்தான் வாழி

தேனாரும் செஞ்சொற் சிலப்பதிகாரக்கதையை
எந்நாளும் போற்றி இனிதூழி வாழ்வாரே

ஏன்றோபுகழ் படைத்த இந்தப்பெரும் கதையை
இன்றுள்ளோர் என்றும் இனிதூழி வாழ்வாரே

ஆல்போல் தழைத்து அறுகதபோல்வேரோடி
மூங்கிற் போல் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பார்

கன்றுபொலியக் கறவையினம் உண்டாக
மண்டலத்தில் என்றும் மகிழ்தூழி வாழ்ந்திருப்பார்

வேண்டி இருப்போர்கள் மென்மேலும் வாழியவே
வாழிய! வாழிய! வாழியவே!

** ............................................................ **



எருவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய முகப்புத்தோற்றம்

அட்டைப்படம் அச்சிடல்: மாருதி அச்சகம், களுதாவளை. 0778842223